DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.526/2024
Deposition of Witness for L.W.1 / P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சித்ரா | | | |
| Husband's Name | : | நாச்சிமுத்து | Occupation | : | கூலி வேலை |
| Village | : | அம்பேத்கர் நகர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் ஈரோடு, தளவுமழை, அம்பேத்கர் நகரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன நாச்சிமுத்து எனது கணவர் ஆவார். கடந்த 02.07.2019 ஆம் தேதி அன்று, மதியம் சுமார் 12.00 மணியளவில், நான் ஈரோடு கடை வீதியில் இருந்தபோது, எனது கணவரின் முதலாளி எனக்கு போன் செய்து, எனது கணவர் சித்தோடு சென்று விட்டு, திரும்பி வரும் வழியில் வீரப்பன்சத்திரம் அருகில் லாரி மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும், அதில் எனது கணவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவரை சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்துள்ளதாகவும் கூறினார். நான் உடனடியாக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மருத்துவரை நான் கேட்டபோது, எனது கணவர் இறந்து விட்டதாக அவர் கூறினார்.(சாட்சி அழுதுக்கொண்டே சாட்சியம் அளிக்கிறார்). பின்னர் நான் ஈரோடு வடக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் மாலையில் ஈரோடு அரசு

மருத்துவமனையில் நடைபெற்ற எனது கணவரின் பிரேத விசாரணையின் போது நான் பிரேதத்தை அடையாளம் காட்டி உடனிருந்தேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

நான் மருத்துவமனைக்கு செல்லும்போது மணி எவ்வளவு இருக்கும் என்றால், மதியம் 01.15 இருக்கும். போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். பின்னிட்டு நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால், சரிதான். புகார் மனு நான் எழுதியது என்றால், இல்லை, நான் சொல்லச்சொல்ல எனது மகன் எழுதினான்.அதன் பின்னர் என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல, விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்றால், இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். விபத்து ஏற்பட்ட வாகனம் யாருடையது என்றால், எனது கணவரின் ஓனர் உடையது. போலீசார் என்னிடம் விசாரணை செய்யும் போது, எனது கணவரின் ஓட்டுனர் உரிமம் குறித்து அவர்கள் கேட்கவும் இல்லை, நான் அதனை அவர்களிடம் ஒப்படைக்கவும் இல்லை என்றால், நான் பதட்டமாக இருந்ததால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. என்னைக் கேட்கவும் இல்லை, நான் தரவும் இல்லை, எனது மகனை கேட்டால் தெரியும். நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், புகார் மனு எதுவும் அளிக்கப்படவில்லை என்றும், போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.526/2024
Deposition of Witness for L.W. / P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நந்தக்குமார் | | | |
| Father's Name | : | நாச்சிமுத்து | Occupation | : | Spinning Mill |
| Village | : | அம்பேத்கர் நகர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் ஈரோடு **K.G** வலசு, அம்பேத்கர் நகரில் குடியிருந்து கொண்டு, தனியார் **Spinning Mill**-ல் வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன நாச்சிமுத்து எனது தந்தை ஆவார். கடந்த **02.07.2019** ஆம் தேதி அன்று, மதியம் சுமார் **12.50** மணியளவில், எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அப்பாவிற்கு அன்றைய தினம் சுமார் **12.00** மணி அளவில் ஈரோடு சக்தி ஈரோடு, வீரப்பன்சத்திரம் **Suzuki Showroom** அருகில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த எனது அப்பாவின் மீது **407** வேன் மோதி, விபத்து ஏற்பட்டதாக கூறினார். பின்னர் நானும், எனது அம்மாவும், உடனடியாக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கு மருத்துவரை விசாரித்த போது எனது அப்பா இறந்து விட்டதாக கூறினார். மேற்படி விபத்து தொடர்பாக நானும், எனது அம்மாவும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது அம்மா, எனது அப்பாவிற்கு விபத்து நடந்த விபரத்தினை எனக்கு போன் மூலம் தெரிவித்த போது நான் எங்கு இருந்தேன் என்றால், லக்காபுரத்தில் இருந்தேன்.

அம்மா எங்கிருந்து போன் செய்தார்கள் என்றால், ஈரோட்டில் இருந்து போன் செய்தார்கள். நான் வந்து தான் என் அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன் என்றால், சரிதான். மருத்துவமனைக்கு செல்லும் போது மணி எவ்வளவு இருக்கும் என்றால், மதியம் 01.10 இருக்கும். அங்கிருந்து புகார் அளிப்பதற்காக காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால், மதியம் 03.00 மணிக்கு சென்றோம். என் அம்மா அளித்த புகார் யாரால் எழுதப்பட்டது என்றால், எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்திற்கு நானும், என் அம்மாவும் மட்டும்தான் சென்றோம் என்றால், சரிதான். இந்த விபத்திற்கு பின்னிட்டு என் அப்பா இறந்ததற்காக நீதிமன்றத்தில் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், நானும், எனது தாயாரும் காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை என்றும், இறந்தவர் என் தந்தை என்பதாலும், விபத்தில் இழப்பீடு பெறுவதற்காகவும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.